தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 18-11-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## நவம்பரில் தக்காளி விலை சீராக இருக்கும்

ஏழை மக்களின் ஆப்பிள் என்று அழைக்கப்படும் தக்காளி உலக அளவில் உருளைக்கிழங்கிற்கு அடுத்த முக்கிய உணவுப் பொருள் ஆகும். சீனா, அமெரிக்கா, இத்தாலி, துருக்கி, இந்தியா மற்றும் எகிப்து போன்ற நாடுகளில் தக்காளி பரவலாகப் பயிரிடப்பட்டு வருகின்றது. கடந்த 2010-11ல் உலக அளவில் 4.75 மில்லியன் எக்டேரிலிருந்து 159.34 மில்லியன் டன்கள் தக்காளி உற்பத்தி செய்யப்பட்டது. இதன் உற்பத்தித்திறன் எக்டேருக்கு 32.8 டனகள் ஆகும். உலக அளவில் தக்காளி உற்பத்தியில் 32 சதவீத பங்களிப்புடன் சீனா முதலிடத்திலும் 9.47 சதவீத பங்களிப்புடன் இந்தியா இரண்டாமிடத்திலும் உள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியாவில் தக்காளி சாகுபடிப் பரப்பு பெருமளவு அதிகரித்துள்ளது. இந்தியாவில் 2006-07ல் 5.96 இலட்சம் எக்டேராக இருந்த தக்காளி சாகுபடிப் பரப்பு 2010-11ல் 8.65 இலட்சம் எக்டேராக அதிகரித்துள்ளது. மேலும் 2006-07ம் ஆண்டில் 10.05 மில்லியன் டன்களாக இருந்த உற்பத்தி 2010-11ம் ஆண்டில் 16.8 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளது. அதே காலத்தில் உற்பத்தித்திறன் 16.9 டன் / எக்டேரிலிருந்து 19.5 டன் / எக்டேராக அதிகரித்துள்ளது.

இந்தியாவில் தக்காளி உற்பத்தியில் 35 சதவீத உற்பத்தியுடன் ஆந்திரா முதலிடத்திலும் 10.44 சதவீத உற்பத்தியுடன் கர்நாடகா இரண்டாம் இடத்திலும் உள்ளன. தமிழ்நாடு 3.45 சதவீத உற்பத்தி பங்களிப்புடன் ஒன்பதாம் இடத்தில் உள்ளது. மேலும் உற்பத்தித்திறனில் எக்டேருக்கு 34.3 டன்களை உற்பத்தி செய்து கர்நாடகா முதலிடத்திலும் குஜராத் (25.2 டன் / எக்டேர்) மற்றும் பீகார் (22.60 டன் / எக்டேர்) முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடத்திலும், தமிழகம் எக்டேருக்கு 21.4 டன்களை உற்பத்தி செய்து நான்காம் இடத்திலும் உள்ளது.

தமிழ்நாட்டில் தக்காளி சாகுபடியானது வருடம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டாலும் சித்திரை, ஆடி மற்றும் கார்த்திகைப் பட்டங்களில் பரவலாகப் பயிரிடப்படுகிறது. தமிழகத்தில் பிப்ரவரி, ஜூன் மற்றும் அக்டோபர் ஆகிய மூன்று மாதங்களிலும் தக்காளி அதிகபட்சமாக அறுவடை செய்யப்படுகிறது. தமிழகத்தில் பிப்ரவரி, அக்டோபர் மாத அறுவடையானது ஆந்திரா மற்றும் கர்நாடகா அறுவடை காலத்துடன் ஒத்திருப்பதால் அந்த மாதங்களில் மைசூர் மாவட்டம் மற்றும் ஆந்திரப்பிரதேசத்தின் சில பகுதிகளில் இருந்து ஒட்டன்சத்திரம் மற்றும் கோவை சந்தைக்கு வரத்து அதிகரித்து, பண்ணை அளவில் விலை வீழ்ச்சி ஏற்படுகிறது.

தமிழ்நாட்டில் தர்மபுரி, சேலம், கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர் மற்றும் தேனி மாவட்டங்களில் பரவலாகத் தக்காளி பயிரிடப்பட்டாலும் சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்கள் உற்பத்தியில் முக்கிய பங்களிக்கின்றன. சேலம் மாவட்டத்தில் மேட்டூர், ஏற்காடு, இடப்பாடி, ஓமலூர், ஆத்தூர், கெங்கவள்ளி மற்றும் சங்ககிரி ஆகிய இடங்களிலும், தர்மபுரி மாவட்டத்தில் பென்னாகரம், அரூர், பாப்பிரெட்டிபட்டி, பாலக்கோடு மற்றும் போச்சாம்பள்ளி ஆகிய இடங்களிலும் முக்கியமாகப் பயிரிடப்படுகின்றது.

தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம் மற்றும் கர்நாடகாவில் நிலவிய கடும் வறட்சியின் காரணமாக கடந்த ஜுலை, ஆகஸ்டு மாதங்களில் தக்காளி கிலோவிற்கு ரூ.45 வரை விற்பனையானது. தற்போது ஆங்காங்கே பெய்து வரும் பருவ மழையினால் விவசாயிகள் அறுவடை செய்யப்படும் தக்காளிக்கு கிடைக்கும் விலை பற்றி அறிய ஆவலாக உள்ளனர். இதை கருத்தில் கொண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் கடந்த 11 வருடங்களில் கோயம்புத்தூர் உழவர் சந்தையில் நிலவிய தக்காளி விலை விபரங்களை ஆராய்ந்தது.

ஆய்வின் முடிவில், கோயம்புத்தூர் மொத்த விலை சந்தையில் ஒட்டு ரக தக்காளியின் விலையானது நவம்பர் மாத இறுதி வரை கிலோவிற்கு ரூ.16-20 வரை இருக்கும் என கணித்துள்ளது. ஆந்திரப்பிரேதசம் மற்றும் தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவ மழை இன்னும் தீவிர அடையும் பட்சத்தில் விலை சற்று ஏறுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. கோயம்புத்தூர் சந்தையை ஒப்பிடும் பொழுது ஒட்டன்சத்திரம் மொத்த விலை சந்தையில் தக்காளி விலையானது கிலோவிற்கு ரூபாய் 2 முதல் 5 வரை குறைவாக இருக்கும்.

<u>**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள**</u>:-

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி : 0422 -2431405.

<u>**மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ள**</u>:-

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தோட்டக்கலைக் கல்லுாரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்துார்-641 003.
தொலைபேசி எண் - 0422-6611374 / 6611283.

மக்கள் தொடர்பு அலுவலர்